161
157

29/10/18

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – 2018–19–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – "முனைவர் மு.தமிழ்க் குடிமகன், திரு.மேலாண்மை பொன்னுசாமி மற்றும் முனைவர் பொன். சவுரிராசன் ஆகிய தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கம் செய்யப்படும்'' எனும் அறிவிப்பினை செயல்படுத்துதல் – அதற்கான செலவினத் தொகை ரூ.25,20,000/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1–1)த் துறை

அரசாணை (நிலை) எண்.237

009038
4744/2018

நாள் 25.10.2018
விளம்பி, ஐப்பசி –8
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கப்பட்டவை:–

1. 2018–2019–ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு) அவர்களின் அறிவிப்பு.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.4744/தமிழ்4/2018, நாள் 18.06.2018, 22.06.2018 மற்றும் 06.08.2018.

******

ஆணை:

2018–19–ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டமன்ற பேரவைக் கூட்டத் தொடரில் 13.06.2018 அன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு) அவர்களால் பின்வருமாறு அறிவிப்பு அறிவிக்கப்பட்டது :-

> "முனைவர் மு.தமிழ்க் குடிமகன், திரு.மேலாண்மை பொன்னுசாமி மற்றும் முனைவர் பொன். சவுரிராசன் ஆகிய தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.''

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், தமிழ்ச் சான்றோர்கள் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அந்நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்றும் அவ்வகையில், இதுவரை 146 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூ.10.90 கோடி பரிவுத்தொகை அரசால் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது எனவும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயற்படுத்தும் முகமாக நூல்கள் நாட்டுடைமை செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மூன்று தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுடன் தொடர்புகொண்டு நூல்களின் எண்ணிக்கை, நூல்களின் படிகள், மரபுரிமையர் சான்றாவணம் மற்றும் பிற விவரங்கள் ஆகியவற்றைப் பெற நடவடிக்கை மேற்கொண்டு, அதன் அடிப்படையில் பின்வரும் விவரங்களை தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

(i) முனைவர் மு.தமிழ்க் குடிமகன்:

முனைவர் மு.தமிழ்க் குடிமகன் அவர்களின் மனைவி திருமதி. வெற்றிச்செல்வி அவர்கள், அவரது கணவர் மாண்புமிகு மேனாள் தமிழ் ஆட்சிமொழி அமைச்சர் மு.தமிழ்க் குடிமகன் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்காகவும், தமிழ் இன உணர்வுக்காகவும், தமிழ்கூறும் நல்உலகம் போற்றும் வகையிலும் 26 நூல்கள் எழுதியுள்ளதாக தெரிவித்து அவரது படைப்புகள் உலகமெங்கும் அனைவருக்கும் செல்ல வேண்டுமென்பதற்காக அவர் எழுதிய நூல்களை நாட்டுடைமையாக்குமாறு கோரியுள்ளார்.

(ii) திரு.மேலாண்மை பொன்னுசாமி

திரு.மேலாண்மை பொன்னுசாமி அவர்களின் மகன் திரு.பி.வெண்மணிச்செல்வன் அவர்கள், அவரது தந்தையார் இலக்கிய படைப்புகள் மூலம் தமிழ்ச்சேவை புரிந்துள்ளதாகவும், அவரின் படைப்புகளுக்காக இருமுறை தமிழக அரசின் விருதும் மற்றும் மத்திய அரசின் சாகித்திய அகாதமி விருதும் பெற்றுள்ளதாகவும் தெரிவித்து, திரு.மேலாண்மை பொன்னுசாமி அவர்கள் கடந்த வருடம் உடல்நலக் குறைவால் இறந்துவிட்ட நிலையில், அவர் எழுதிய நூல்கள் மக்களுக்கு பயன்படும் வகையில் நாட்டுடைமையாக்குமாறு அவர் குடும்பத்தின் சார்பாக வேண்டியுள்ளார்.

(iii) முனைவர் பொன்.சவுரிராசன்

முனைவர் பொன்.சவுரிராசன் அவர்களின் குடும்பத்தார், திரு.பொன்.சவுரிராசன் அவர்கள் எழுதி வெளியிட்ட நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்க தங்களது இசைவினை தெரிவித்துள்ளனர்.

4. தற்போது நாட்டுடைமையாக்க கருதப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்ட மூன்று தமிழறிஞர்களின் நூல்களுக்கு பரிவுத் தொகை ரூபாய் 25 இலட்சம் வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கவேண்டிய தொகையினை அரசு நிலையில் நூல்களின் தரம், அவை மக்களுக்கு ஏற்படுத்திய தாக்கம் மற்றும் தமிழ் இலக்கிய உலகிற்கு அவை பயன்படும் விதம் ஆகியவற்றின் அடிப்படையில் கருதிப்பார்த்து மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு அமைச்சர் அவர்களால், பின்வருமாறு பரிவுத் தொகை நிர்ணயம் செய்து வழங்கப்பெறலாம் எனத் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

| வ. எண். | தமிழறிஞர் பெயர் | பரிவுத் தொகை |
|---|---|---|
| 1. | முனைவர் மு.தமிழ்க் குடிமகன் | ரூ.11.00 இலட்சம் |
| 2. | திரு.மேலாண்மை பொன்னுசாமி | ரூ.11.00 இலட்சம் |
| 3. | முனைவர் பொன். சவுரிராசன் | ரூ.3.00 இலட்சம் |

5. நாட்டுடைமையாக்கப்படுவதற்கான பரிவுத் தொகை ரூபாய் 25 இலட்சத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேரில் பெற வருகை தரும் மூன்று தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள்/குடும்பத்தாருக்கு சிறப்பு செய்யும் பொருட்டு, சென்னை வந்து செல்வதற்கான போக்குவரத்துச் செலவினம், தங்குமிடம், சிற்றுண்டி, மதிய உணவு, தேநீர், குடிநீர், காசோலை உறை உள்ளிட்ட பிற சில்லறைச் செலவினங்களை மேற்கொள்ள ஏதுவாக ரூ.20,000/– உரிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பெறலாம் எனவும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

163

6. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், மேற்காணும் அறிவிப்பினை செயற்படுத்த ஏதுவாக, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, மறைந்த தமிழறிஞர்கள் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் மற்றும் திரு. மேலாண்மை பொன்னுசாமி ஆகியோரின் நூல்களை நாட்டுடைமை செய்து தலா ரூ.11.00 இலட்சமும் மற்றும் முனைவர் பொன். சவுரிராசன் அவர்களின் படைப்புக்களை நாட்டுடைமை செய்து ரூ.3.00 இலட்சமும் பரிவுத் தொகையாக மறைந்த தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு அளிக்கும் வகையில் மொத்த பரிவுத் தொகை ரூ.25,00,000/– மற்றும் சில்லறைச் செலவினங்கள் ரூ.20,000/– என் ஆகமொத்தம் ரூ.25,20,000/–க்கு (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) நிதியொப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6–இல் அனுமதிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

(i) <u>பரிவுத் தொகை (ரூ.25,00,000/–)</u>

"2202 பொதுக்கல்வி – 05 மொழி வளர்ச்சி – 800 ஏனையச் செலவு – மாநிலச் செலவினங்கள் – AK தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை – 09 உதவித்தொகை – 03. குறிப்பிட்டத் திட்டங்களுக்கான மானியங்கள்"
(த.தொ.கு. 2202 05 800 AK 0930)

(ii) <u>சில்லறைச் செலவினம் (ரூ.20,000/–)</u>

"2202 பொதுக்கல்வி –05 மொழி வளர்ச்சி – 800 ஏனையச் செலவு – மாநிலச் செலவினங்கள் – AK தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநர் பொறுப்பில் உள்ளவை –05 அலுவலகச் செலவுகள் – 02 ஏனைய சில்லறைச் செலவினங்கள்"
(த.தொ.கு. 2202 05 800 AK 0529)

8. மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2018–2019–ஆம் நிதியாண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2018–2019–ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 6–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட, இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி6–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2018–2019ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்க வரைவு விளக்க குறிப்பினையும், 2018–2019ஆம் நிதியாண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினை தவறாது உரிய நேரத்தில் நிதித் (த.வ.(ம).செ) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 6–இல் அனுமதிக்கப்பட்டவாறான தொகையினைத் தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு தொகுதி – I, பிரிவுக்கூறு 99இன் கீழ் முன்பணமாக பெறவும், பெற்ற முன்பணத்தை தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு பகிர்ந்தளிக்கவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதி

அளிக்கப்படுகிறது. உரிய செலவுச்சீட்டுகளின் அடிப்படையில் பெறப்பட்ட முன்பணத்தை நேர்செய்யவும், தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. மேலே பத்தி 6–இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஒப்பளிப்பு செய்யப்படும் பரிவுத் தொகையை பெற்று, வருவாய்த் துறையினர் அளிக்கும் மரபுரிமையர் சான்றின் அடிப்படையில், மரபுரிமையர்களுக்கு பகிர்ந்து அளிக்க தமிழ் வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.50811/நிதி(தவ(ம)செ)/2018, நாள் 25.10.2018–இல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1709 (ஆயிரத்து எழுநூற்று ஒன்பது) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. வெங்கடேசன்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
தொடர்புடைய தமிழறிஞர்களின் குடும்பத்தினர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர்,சென்னை–9/18

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களின்
முதுநிலை தனிச்செயலர், சென்னை–9.
நிதி (த.வ.(ம)செ/வ.செ.பொ.2)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

25/10/18
பிரிவு அலுவலர்
25/10/18